உ

# கதிர்காம பாதயாத்திரைப் பாமாலை



ஆக்கம்:

கவிஞர் வைரமுத்து கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காம வழிநடைப் பாமாலை



ஆக்கம் :

கவிஞன் வைரமுத்து கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காம வழிநடைப் பாமாலை

## அணிந்துரை

ஈழத்தின் கிழக்கின் பொக்கிஷமான கலாசார பாரம்பரியமிக்க, நல்லொழுக்க சிந்தனைக்கும், செயற்பாட்டிற்கும் வழிகாட்டி, ஆன்மீகப் பூப்பூத்து அட்டதிக்கும் பரவும் சேனைக்குடியிருப்பின் அருள் தாகம் கொண்டவர் புலவர் வைரமுத்து கணேசன், தமிழை வயப்படுத்தி கவிதை படைக்கும் நட்கவிஞர். இவர் கவிதைகள் யாவும் யாவரையும் கவரக்கூடியதாக ஜனரஞ்சகமாகவே இருக்கும். இந்த ஆற்றல் அவருக்குக் கிடைத்த ஒரு வரம் என்றே கூறவேண்டும்.

ஆறாம் வகுப்பு வரை கற்றும், கூறும் தமிழ் சிக்கல், திக்குவாயால் வெக்கி வேறு பேச்சி பேசமுடியாது வேதனையால் மனம் நொந்து, பாடறியாது, பாட்டிலுள்ள வகையறியாது, ஏடறியாது, எழுத்தறியாது, இலக்கண யாப்பு முறையறியாது, பேரறியாது, புகழறியாது உண்மையைத் தவிர வேறேதும் உணர்ந்தறியாது, பகுத்தறிவு எனும் பல்கலைக்கழகத்தில் பட்டறிவு எனும் பட்டம் பெற அன்னை முத்துமாரி அனுக்கிரகம் அளித்ததனால், கும்மி, காவியம், காவடி, நாடகம், கூத்துக்கள், வில்லுப்பாட்டு, வழிநடைப்பத்துக்கள், வரலாற்று அவதார மகிமைகளை எளிய நடையில் கூறும் கவிதையாக்கங்கள், கதாப்பிரசங்கம் என பல்கலை வித்தகராய் பரிணமிக்க, கணேசனின் கவித்துவத்தால் மேலும் பக்தி மனம் கமழ, தன்னுடைய சிந்தனை திறனை வைரத்தை தங்கத்திலே பதித்து அழகுறச் செய்தது போல, கற்பனைத்திறன், கிரகிக்கும் திறன், அலசி ஆராயும் திறன், சரியாக மதிப்பிடும் திறன் கொண்டு, எளிய சொற்கள், இனியசந்தம், தெளிவான பொருள், சிறந்த உணர்ச்சி பொங்கும் "கதிர்காம வழிநடைப் பாமாலை", என்ற பக்திப் பாக்களால் பக்தி சுவை நனிசொட்டும் பாமாலையொன்றை ஆக்கி அளித்துள்ளார். தான் எடுத்துக் கொண்ட கருத்துக்களை வெளிப்படுத்த, உகந்த யாப்பு வகைகளைத் தேர்ந்தெடுத்து கும்மிப்பாடல் எழுபத்தாறு, வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம், அந்தக்கால யாத்திரைப் பாக்கள் இருபத்தாறு, இந்தக்கால யாத்திரைப் பாடல்கள் இருபத்து நான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறு மெட்டுக்களில் அமைத்துள்ளதோடு, வழிநடைப்பத்து பதின்மூன்று, எனும் பலவித வடிவ மணம் பரப்பும் மலர்ப் பாவினங்களைக் கொண்டு கட்டியிருப்பதனால் இப்பாமாலை கவித்துவத்தின் பட்டொளி பிரகாசித்து நிற்பதனால், வாடாமாலை, வளம் தரும் மாலை, விண்ணவர் மண்ணவர் விரும்பி ஏற்கும் மாலை, சொல் நயம் பொருள் நயம் செறிந்து நிற்கும் சிறந்த, சுந்தரத் தமிழில் சுவையளிக்கும் மாலை.

புலவர் கணேசன் தமிழ் மொழி மீது ஆறாக்காதல் கொண்டு, ஆன்மீக வழி நின்று தேனிலும் இனிய செந்தமிழ் பாக்களால் கதிராம கந்தவேளின் மகிமைகளை சொந்தமுடன் பாடி, இதனைப் படிக்கும் எல்லோரையும் கதிர்காமக் கந்தன் பாதமலர் தொழும் பாக்கியத்தை அளித்துள்ளார். இவரின் இந்த முயற்சி மாக்களைக் கூட மனிதர்களாக்கி, தீய எண்ணங்களிலிருந்து விலக்கி ஆத்மீக வாழ்க்கையை அமைத்திட அடிகோலும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

புலவரின் மொழி சிறக்க, கவிமழை பக்தி மணம் பரப்ப, என்றும் ஆன்மீகத்தில் திழைக்க, அருளைப்பொழிந்து நிற்கும் இந்தப் பாமாலையை வாங்கிப்படித்து இன்புறுவதோடு, சிறந்தவொரு பொக்கிசமாகப்பேணி, கதிர்காமக் கந்தனருளால் புலவர் கணேசன் சகல செல்வ போகம் மிக்க பெருவாழ்வு பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ மனமார வாழ்த்துவதோடு, இன்னும் பல இறைப்பாமாலைகளை ஈர்ந்தளிக்க, எல்லாம் வல்லமையும் அவருக்களிக்க, வல்ல கதிர்காமக் கந்தனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

இதற்குமுன் இப்புலவர் பதினேழுக்கு மேற்பட்ட சிறுகாவியம், பெருங் காவியம் எனும் அருட்காவியங்கள், ஊர்வலக் கும்மி, வழிநடைக் கும்மி, காவடிப் பாடல்கள், ஊஞ்சற் பாடல்கள், வழிநடைப் பத்துக்கள், தாதன் வருகையும் தீப்பளைய வரலாறும் எனும் நூல்களை அச்சுவாகனமேற்றி அடியார்களுக்கு அளித்துள்ளார் என்பது ஈன்று குறிப்பிடத்தக்கது.

**கவிஞர்**

**ஆரையூர் அருள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

அனைத்தும் இறைவன் செயலே!
வைரமுத்து கணேசன் என்பவர் கல்முனைப் பிரதேசத்தின் மேற்கே சேனைக்குடியிருப்பு எனும் மூத்த தமிழ் கிராமத்தில் பிறந்த ஒருவர்.

இவரின் தந்தையார் ஒரு விவசாயி தாயோ தெய்வகளைகட்டிய சீரும் சிறப்பும் பொருந்திய ஒரு குடும்பப் பெண் இவர்களிடம் பாடசாலைக் கல்வி மேலோங்காவிட்டபோதிலும் இறையருளால் ஞானம் மேலோங்கி இருக்கின்றது.

இதன் காரணமாகவேதான் இவர்களின் புதல்வனாகிய வைரமுத்து கணேசன் என்பவர் ஒரு சிறந்த எழுத்தாளராகவும், கவிஞனாகவும் இப்பிரதேசத்தில் எல்லோராலும் பாராட்டப்பட்டவராகவும், கௌரவிக்கப் பட்டவரகாவும், அறியப்பட்டவராகவும் இருக்கின்றார்.

அவர் தன் தந்தையின் தொழிலாகிய விவசாயத் தொழிலையே பின் பற்றிச் செய்துகொண்டிருக்கும் இவ்வேளையிலும் எழுத்துத்துறையையே மிக மிக முக்கியமாகக் கைக்கொண்டிருப்பதும் பாராட்டுதலுக்குரிய ஒன்றாகும்.

அன்றிலிருந்து இன்றுவரையும் கிட்டத்தட்ட பதினெட்டு பத்தொன்பது (18, 19) நூல்களுக்கு மேல் வெளியீடு செய்திருக்கின்றார்.

1. காவடிச்சிந்து
2. வில்லுப்பாட்டு
3. வாழ்க்கைச் சக்கரம்
4. நாட்டுக்கூத்து
5. மோட்சப்பத்து
6. மயானப் பத்து
7. கோயில் வரலாறு பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயம்

போன்ற பால நூல்களை வெளியீடு செய்தவர். அத்தோடு தற்பொழுது வெளியீடு செய்யப்பட்டிருப்பதுதான் "கதிர்காம பாமாலை" எனும் இந்நூல். மேலும் பல நூல்களை வெளியீடு செய்வதற்கும், இவரின் இலக்கியப் பணி தொடர்வதற்கும், எதிர்கால சந்ததியினர் தமிழ் மொழியின் மகிமைதனை அறிந்து கொள்வதற்கும், இவரின் உடல்நிலையில் எவ்விதமான தொய்வுநிலைகளும் ஏற்படாவண்ணம் இறைவன் இவரை ஆண்டருளவேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து எனது ஆசியுரையை நிறைவுசெய்து கொள்கின்றேன்.

நன்றி.

**எஸ். சிவகுருநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னுரை

பயபக்தியோடு பாதயாத்திரை செய்து கதிர்காமக்கந்தன் கருணை பெற வேண்டுமென்ற நம்பிக்கையோடு வந்திருக்கின்ற பக்த கோடிகளே உங்கள் அனைவருக்கும் எனது அன்பு வணக்கம்.

இதற்கு முதல் 2006ல் முதலாம் பாகம் 2007ல் இரண்டாம் பாகம் என்று பாதயாத்திரையின் சிறப்புக்களை சிறியோர் அனுபவ அறிவுக்கெட்டிய வரை சிறு சிறு நூலாக்கி உங்கள் கரங்களில் தவழவிட்டேன். அதற்கு நீங்கள் தந்த மதிப்புக்கும் மரியாதைக்கும் எனது மனமார்ந்த நன்றி.

இப்போது பாதயாத்திரையில் அன்றும், இன்றும், என்னும் தலைப்போடு உருவாக்கி உங்கள் கரங்களுக்குக் கிடைக்க ஆவன செய்துள்ளேன். இதில் கும்மிபாடல் பத்து, வில்லுப்பாடல், காவடிப்பாடல், கதாப்பிரசங்கம் போன்றவற்றை உள்ளடக்கி உங்கள் கரங்களில் தவழவிடுகின்றேன். இதில் ஏதும் குற்றம் குறைகள் இருப்பின் என்னை மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு தங்களுக்குத் தெரிந்தவற்றை எனக்கு எடுத்துரைத்து எனக்கு வழிகாட்டியாக வருவீர்களாக என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வண்ணம்
உங்கள் கவிஞன்
வைரமுத்து கணேசன்
பிள்ளையார் கோயில் வீதி,
சேனைக்குடியிருப்பு,
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்நாவல் மரத்தடியில் வீற்றிருக்கும் மூத்தவனை
வண்ணவடிவமுகன் வாரணமுகத்தவனை - திண்ணமுடன்
உள்ளத்தில் வைத்து உளமாரப் பணிவோர்க்கு
அள்ளித்தரும் ஆனைமுகன் காப்பு.

மலைவாசல் கணபதியுன் பாதம் - பக்தர்
மகிழ்வோடு நித்தம் பணிவோர்க்கு
தலைசிறந்த நல் முத்துக்களாம் - என்ற
தத்துவ நற்கவி தாருமையா

மழலை கேட்டு மனமகிழும் - எங்கள்
மாதாவே வாணித் தாயாரே
அழகு தமிழில் முத்துக்களை - நீயும்
அன்போடு அள்ளித் தாருமம்மா

வேளையறிந்து வரமருளும் - எங்கள்
வேத நாயகா வித்தகனே
காளையேறி அம்மையுடன் - வந்து
கருணை நீயும் தாருமையா

கருடவாகனம் மீதமர்ந்து - உயிர்
காக்கும் கடவுளே பூரணனே
திருமகள் தன்னோடு வாருமையா - நாளும்
தீந்தமிழ்க் தேன் கவிதாருமையா

ஆறுமுகம்கொண்ட வேலவனே - கந்தா
அன்னை இருபக்கம் கொண்டவனே
கூறும் தமிழுக் கதிபதியே - இந்தக்
குழந்தைமேல் கருணை காட்டுமையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்தில் அமர்ந்து அருள் வளங்கும் - எங்கள்
ஆறுமுகன்பதி கொண்டிருக்கும்
உகந்தை மலையின் புகழ்கூற - நீங்கள்
உள்ளன்போடு கேட்டிடுவீர்

1. காலம்துவாபரம் முடிந்த பின்பு - இந்தக்
கலியுகம் வந்த பின்னாலே
பாலமுருகன் உகந்தையிலே - அவர்
பற்பல அற்புதம் செய்ததுண்டு

2. முன்னாளில் நடந்த அற்புதத்தை - என்னால்
முடிந்தவரை நான் எடுத்துரைக்க
என்னாழும் ஆறு முகவேலன் - பாதம்
எழியேன்என்றும் பணிந்திடுவேன்

3. தேவியர் இருவரைத் தான்மணந்து - வேலன்
திருப்பரம் குன்றில் இருக்கையிலே
தேவியர் இருவரும் மனமுவந்து - நாதா
சிறியதோர் வேண்டுகோள் என்றுரைத்தார்

4. திருமணம் செய்த காலம்முதல் - நாதா
திருப்பரம் குன்றிலே வாழ்ந்துவாறோம்
பெருமைக்குரிய தலங்களுக்கு - நாம்
போய் வந்தால் நன்றாய் இருக்குமையா

5. குன்று இருக்கும் இடமெல்லாம் - இந்தக்
குமரன் இருக்கும் இடமென்று
என்றென்றும் பக்தர் வணங்குகின்றார் - நாங்கள்
என்றுமேசென்று பார்த்ததில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. எங்களை நீங்கள் கூட்டிப்போக - நாதா
எப்போதும் மனது வைத்ததில்லை
உங்கள் விருப்பம்போல் சென்றுவர - நீங்கள்
உடனே கருணை காட்டவேண்டும்

7. அன்புக் கிசைந்தஎன் கண்மணிகாள் - உங்கள்
ஆசையை நிறைவேற்ற நானிருக்கேன்
இன்று தான் அதனை எடுத்துரைத்தீர் - அதை
இப்போதான் நானும் சொல்லுகின்றேன்.

8. ஆயிரம் கோடித் தலங்களெல்லாம் - இந்த
ஆறுமுகனுக் கிருந்தாலும்
பாயிரம்பாடிப் பக்தரெல்லாம் - நித்தம்
பலமுறை நம்மைப் பணிந்தாலும்

9. அன்புக் கினியஎன் நாயகிகாள் - இந்த
அவனியெல்லாம் படைவீடு
என்றென்றும் எனக்கு இருந்தாலும் - எனக்
ஏற்ற படைவீடு ஒன்றிருக்கு

10. அன்று சூரசங்காரம் செய்ய - இந்த
அழகுவேலை விட்டபோது
நன்றாகச் சூரன் உடல்கிழித்து - அது
நம்கரம் வந்து சேருமுன்னே

11. திரிகோண மாக அதுபிரிந்து - அன்று
திக்கிலே எங்கே சேர்வோமென்று
வெருகலம் பதியிலே ஒருகூறு - சென்று
விருப்பம்போல் அங்கே தங்கிக்கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. அதிவேகம் தன்னோடு சென்றகூறு - அது
ஆனந்தமான இடம்தேடி
பதிகொள்ளத் திருக்கோயில் நல்லதென்று - அது
பக்குவமாக அங்கு தங்க

13. உகந்த இடமென்று மறுகூறு - தான்
உகந்த கிரியிலே தங்கியதால்
உகந்த மலையென்று நாமிட்டு - பக்தர்
உள்ளன்போடு வணங்கி வாறார்

14. மண்ணிலும் விண்ணிலும் காணாத - பெரும்
மகத்துவம் அங்கே இருக்கிறது
எண்ணியும் பாராத மனவுறுதி - கொண்டு
எண்ணற்ற பக்தர்கள் வனம்தனிலே

15. தங்களுயிரையும் துச்சமென்று - வனம்
தன்னிலே பக்தர் கால்நடையாய்
எங்களைக்காணக் கதிர்காமம் - செல்ல
எண்ணற்ற அடியவர் யாத்திரையாய்

16. உகந்தகிரியிலே தங்கியிருந்து - நம்மை
உள்ளன்போடு பணிந்துவிட்டு
பகலிலே நடந்து வனம் தனிலே - சென்று
பகலவன் மறைந்த பின்னாலே

17. அனைவரும் ஓரிடம் தனில்கூடி - அன்று
அன்போடு நமது புகழ்பாடி
வினையொன்றும் வாராமல் எங்களையும் - சுவாமி
விருப்போடு காத்திட வேண்டுமென்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. இப்படிப் பத்து நாள் நடந்து - சென்று
இனிதாகக் கதிர்காமம் பதிதனிலே
தப்பாமல்தேன்தினை மாவிளக்கு - ஏந்தி
தெரிசனம் பெற்ற மகிழ்வோடு

19. திருவிழாக் கண்டு மனமுருகித் - தங்கள்
தீவினையெல்லாம் தீருமென்று
பெருமையாய்த் தீர்த்தமும்தானாடி - பக்தர்
பேரின்ப வாழ்வெல்லாம் பெற்றிடுவார்

20. அப்படியான தலமெல்லாம் - காண
ஆசை எங்களுக் கிருக்காதா
இப்பவே எங்களை கூட்டிச் சென்று - நாதா
இனிய தலமெல்லாம் காட்டவேண்டும்

21. உடனே ஏற்பாடு செய்துவிட்டேன் - உங்கள்
இருவரையும் நான் அழைத்துச்செல்ல
கடலிலே செல்ல ஓர்தங்கத்தோணி - செய்து
காத்துயிருக்குது புறப்படுவோம்

22. அழகன்முருகன் இருவரையும் - ஏற்றி
அவரே சாரதியாய் அமர்ந்து
வழமாகக் கடலைத் தாண்டிவந்து - அன்று
வந்தார்கள் உகந்தகிரிநாடி

23. தங்கத்தோணியை விட்டிறங்கி - வேலர்
தன்னுடன் தேவிமார் தனையழைத்து
எங்கெல்லாம் காணாத புதுமைதன்னை - நீங்கள்
இங்கேயே காணலாம் எனவுரைத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. மான்மரை கூட்டமாய் மேய்வதுவும் - அங்கே
மயில்கள் நாட்டியம் ஆடுவதும்
தேனுண்ணும் வண்டுகள் ரிங்காரம் - செய்யும்
தெவிட்டாத ஓசை ஓர்புறமும்

25. அலைகடலோசை ஓர்புறமும் - அங்கே
யானைகளின் ஓசை மறுபுறமும்
தலைசாய்ந்து மலர்கள் வணங்குவதும் - என்ற
சந்தோஷமான நிகழ்வுகாண

26. மங்கையர் இருவரும் மனமகிழ்ந்து - அப்போ
மகிழ்வோடு முருகனைத் தானோக்க
உங்கள் நோக்கமும் புரிகிறது - என்று
உகந்த மலையிலே ஓரிடத்தில்

27. தங்கவேலால் அப்போது - வேலர்
தன்கையால் அகழ்ந்த பின்னாலே
மங்களம்பொங்கும் மணத்தோடு - அப்போ
மஞ்சள் நீர் அங்கே பெருக்கெடுக்க

28. மஞ்சள்நீரை அள்ளியள்ளி - அப்போ
மனம்போல நன்கு விளையாட
எஞ்சிய மஞ்சள் சிதறியதை - பக்தர்
எக்காலும் காண முடிகிறது

29. இப்படியிருக்கும் வேளையிலே - இரு
வேடுவர் வேட்டையாடி விட்டு
எப்படியோ தண்ணீர் அருந்தவென்று - அப்போ
ஏகினார் உகந்த மலையருகே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. உகந்தகிரியில்நம் குலக்கடவுள் - இங்கே
உகந்து இருக்கிறார் என்று நாகன்
பகன்றதைக் கேட்காமல் மாகனுமே - தன்
பார்வையை தோணிமேல் தான் செலுத்த

31. அவரை வணங்க இப்போது - நான்
அருகதையற்றவன் என்று சொல்லி
கவர்ந்த தங்கத் தோணிமேலே - அவன்
கவனம் அப்போ சென்றதினால்

32. தோணியைக்கொண்டு விலைக்குவிற்றால் - நாம்
சொகுசாக வாழலாம் என்று சொல்ல
நாணிய நாகனும் அப்போது - இது
நமக்கு உதவாது என்றுரைக்க

33. உனக்குத்தேவை யில்லையென்றால் - நாகா
உன்வேலை தன்னை நீபாரு
எனதுதேவைக்கு நானுடைத்து - இதை
எடுப்பேன் என்றான் உறுதியுடன்

34. தடுத்தாலும் நீயிதைக் கேட்கமாட்டாய் - மாகா
தப்பாக எனக்குத் தோணுதப்பா
எடுத்தாலும் நமக்கு உதவாது - உன்
எண்ணத்தையெல்லாம் விட்டுவிடு

35. தாகம்பசியெல்லாம் தீர்ந்துபோச்சி - நாகா
தாமதமின்றி நீ போய்வாரும்
ஏகமனதாக நானுடைத்து - இப்போ
எடுப்பேன் என்பங்கை என்று சொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. என்சொல்லை நீயும் கேட்கமாட்டாய் - மாகா
ஏதோ உன்விருப்பம்போல் நடந்து கொள்ளு
இன்றும் நான்சொல்ல எதுவுமில்லை - என்று
ஏசினான் நாகன் சந்நதிக்கு

37. நாகன் போனபின் மாகனுமே - இது
நமக்குக் கிடைத்த பரிசுஎன்று
வேகமாய்யுடைத்து எடுக்கவேண்டும் - என்று
வெட்டும்கோடரி தனையெடுத்து

38. கோடரியெடுத்து மாகனவன் - அப்போ
கொத்த முயற்சிக்கும் வேளையிலே
கூடாதசெயல்செய்ய எண்ணுகிறாய் - என்று
கொடுத்த அசரீரி தனைக்கேட்டும்

39. எடுத்தமுயற்சியை விடமாட்டேன் - நான்
எவர்தடுத்தாலும் கேட்கமாட்டேன்
தடுப்பவர்முன்னால் வரவேண்டும் - என்று
தைரியமாக வார்த்தைபேசி

40. கொத்தமுயற்சிக்கும் வேளையிலே - அப்போ
கோடரி தவறிக் கீழேவிழ
எத்தனை முறைதான் தவறினாலும் - நான்
எடுத்து உடைப்பேன் என்று சொல்லி

41. மூன்றாம்முறையும் அவன்ஓங்க - அப்போ
முருகன் அருளால் கல்லாக
ஏன்தானோகூட வந்த நாயும் - சேர்ந்து
எல்லாமே கல்லாகத் தான்மாற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. கந்தப்பெருமானை வணங்கிவிட்டு - நாகன்
கதிர்வேலன் நாமத்தை நெஞ்சில்வைத்து
வந்துபார்த்தான் கல்லாக - எல்லாம்
மாயமாய்ப்போன நிலையறிந்து

43. கந்தப்பெருமானே மாகனவன் - உன்
கருணையை அறியாமல் செய்தவற்றை
எந்தக்கோபமும் இல்லாமல் -அப்பா
எம்பெருமனே பொறுத்தருளி

44. வந்ததுபோலவே நாங்கள்போக - இப்போ
வடிவேலாகருணை காட்டுமென்று
நொந்து நாகனும் வேண்டி நிற்க - வேலன்
நோக்கம் அவன்மேல் செலுத்தியதால்

45. நாயும்மாகனும் உயிர்கொண்டு - அப்போ
நான்செய்ததெல்லாம் தப்பு என்று
வாய்விட்டு மாகனும் தான்புலம்பி - அந்த
மால்மருகன் பாதம் தான்பணிந்தான்

46. இருவரும் அவ்விடம் விட்டகல - தோணி
இருந்த இடத்திலே கல்லாக
உருமாறி இங்கே கிடவுமென்று - வேலன்
உடனே உருமாற்றி விட்டுவிட்டார்

47. இப்போது மக்களின் ஆசைதன்னை - தேவி
இனிதாக இருவரும் பார்த்தீர்களா
எப்போதும் எல்லோரும் ஒன்றாயில்லை. இன்னும்
எவ்வளவோசெயல் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. இன்னுமொரு கதை சொல்லுகின்றேன் - தேவி
இதையும் நன்றாகக் கேட்கவேண்டும்.
அன்னாளில் மக்கட் பேறில்லாமல் - இந்த
ஆறுமுருகனே தஞ்சமென்று

49. அன்போடு என்னைப் பணிந்ததனால் - ஒரு
அழகான பெண்மக வீன்றெத்து
இன்பமாய் வேலம்மாள் எனும்நாமம் - சூட்டி
இரக்க குணத்தோடு வழர்க்கையிலே

50. பருவவயது வந்ததுமே - ஒரு
பர்த்தாவைத் துணையாய்த் தேர்ந்தெடுத்து
அருமைக் குடும்பமாய் வாழ்க்கையிலே - அவன்
அவதூறு சந்தேகம் கொள்ளலானான்

51. எக்காலும் வேலவா வேலவா - என்று
என்னாமம் தன்னைக் கூறும்போது
பக்கத்து வீட்லே உள்ளவேலன் - தன்னை
பாசமாய் அழைக்கிறாள் என்று எண்ணி

52. எப்போதும் வாசலை நாடிவந்து - பின்
எவருமேகாணுமுன் போய் விடுவான்
அப்படி நடக்கும் நாளையிலே - ஓர் நாள்
அவளது கணவன் கண்டுவிட்டான்

53. கண்டதும் ஆத்திரம் மேலோங்க - அவன்
கத்தியெடுத்தவன் அப்போது
துண்டாகக்கைகளை வெட்டிவிட்டான் - இனி
துயரம் முடிந்தது என்று எண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. வெட்டியதும்அவன் கண்ணிரண்டும் - பார்வை
வேண்டாமினி யெனத் தான்போக
கட்டிய கணவன் நிலைகண்டு - அவள்
கந்தப்பெருமாளைத் தான்பணிந்து

55. எனது கைபோனாலும் பறவாயில்லை - வேலா
என்கணவன் பார்வை கிடைப்பதற்கு
உனது பாதமே தஞ்ச மென்றேன் - அப்பா
உளமார நல்லருள் தாருமென்றாள்

56. அப்போதே கண்பார்வை பெற்றதோடு - அந்த
அரிவையும் கைகளைப் பெற்றுக்கொண்டாள்
இப்படி எத்தனையோ சித்து - இந்த
உகந்தகிரியிலே நடந்திருக்கு

57. என்று வேலவர் தேவியர்க்கு - நன்கு
எடுத்தியம்பிடும் வேளையிலே
அன்போடு அரகரா கோஷம் கேட்க - அந்த
அன்னையர் இருவரும் சொல்லலுற்றார்

58. வனத்திலே யாரோ கோஷமிடும் - சத்தம்
வடிவேலா காதிலே கேட்கிறது
மனமிரங்கி அருள் புரிவீ ரென்று
மங்கையர் இருவரும் தான் கூற

59. கதிர்காமம் செல்ல பக்தரெலாம் - இப்போ
கால்நடையாக நடந்துவாறார்
கதிரவன் மறைந்ததும் காரிருளில் - பக்தர்
காட்டிலே திண்டாட்டம் ஆடுகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. வழிகண்டு இங்கே வருவதற்கு - இப்போ
வலுமிக்க சோதிப் பிளம்பாக
ஒழியொன்றுகொடுத்து இங்கழைப்போம் - என்று
ஒளிப்பிளம்பாக்கி வேலைவைத்தார்

61. சோதியாய் மலையில் ஒழிகண்டு - பக்தர்
சொக்கநாதன் மகன் கருணையென்று
ஆதியும் அந்தமும் இல்லாத - அந்த
அருட்பெரும்சோதி ஒழியதனால்

62. அடியவரெல்லாம் ஆலயத்தை - வந்து
அடைந்த பின்னாலும் வனத்தினிலே
முடியாமல் பாதை தடுமாறிச் - சிலர்
மூடிய காரிருள் தனிலலைய

63. தேவியர்கள் தம்மை விட்டுவிட்டு - வேலர்
தேடியே வனத்திலே தான் சென்று
காவியுடை யெல்லாம் அணிந்துகொண்டு - இந்த
காட்டிலே எங்கே போறீரென்றார்

64. கதிர்காமக் கந்தன் பதிதேடிப் - போறோம்
காரிருள் வந்து மூடியதால்
எதிர்ப்பட்டபாதை இதுவென்று - எங்கள்
எண்ணம்போல் நடந்து வாறோமென்றார்

65. வனத்திலே கனதூரம் நடந்து விட்டீர் - சாமி
வாருங்கள் வழியைக் காட்டுகின்றேன்
மனத்திலே தென்போடு வந்தாலும் - சாமி
வழியைத் தவற விட்டுவிட்டீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66. தாகமும் பசியும் மேலோங்க - இந்த
தள்ளாத வயதில் நீங்களெல்லாம்
பாகமிருபெண்ணை வைத்திருக்கும் - அந்த
பாலகனைத்தேடிப் போறீர்களே

67. வருசா வருசம் போறீர்களே - அவர்
வாரி ஏதேனும் கொடுத்தாரா
முருகா முருகா என்றாலும் - அவர்
முன்னின்று ஏதேனும் தந்தாரா

68. இந்த வயதிலும் நடப்பதற்கு - சாமி
இருக்குது மெய்யிலே தென்பு என்றால்
அந்தமுருகன் அருள்தானே - இனி
அதைவிட வேறென்ன வேண்டுமப்பா

69. இந்தக் காட்டிலே எங்கிருந்து - சாமி
இங்கே வந்து நீ சேர்ந்தாய்
வந்தது எமக்கு நற்காலம் - சாமி
வழியைக் கொஞ்சம் காட்டிடுவீர்

70. போடியார்மாடெல்லாம் கட்டிவிட்டு - சாமி
பொழுதுபோன பின் நான்வாறேன்
ஓடியோடி வந்ததினால் - இப்போ
உங்களை நானும் கண்டுகொண்டேன்

71. அந்தாத்தெரிகின்ற வெளிச்சம்தான் - சாமி
ஆறுமுகன் கோயில் இருக்குமிடம்
எந்தவழியும் குறுக்கேயில்லை - சாமி
ஏதும் தடையில்லை நீங்கள் போங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72. உயிருள்ள வரைக்கும் மறக்காமல் - சாமி
உதவி நீங்கள் செய்தீர்கள்
பயிருக்கு உரமிட்டு வளர்த்தாப்போல் - சாமி
பகர்ந்தீர்கள் நல்ல வழியதனை

73. நீங்களில்லாமல் இருந்திருந்தால் - சாமி
நிலைகெட்டு வனத்தில் நாங்களெலாம்
தூங்காமல் இரவெலாம் நடந்திருப்போம் - சாமி
சூரியனைக் காணும் மட்டும் என்றார்

74. என்னையும் பொண்டாட்டி பாத்திருப்பார் - சாமி
என்னை விட்டு நீங்களும்தான்
அன்போடு ஆறுமுகன் பதிசேர்வீர் - சாமி
அவசரமென்றால் நான்வருவேன்

75. வருவேன் என்று சொல்லிவிட்டு - அவர்
வந்தாரோ போனாரோ எங்கேயென்று
முருகா முருகா என்று பக்தர் - அப்போ
முழங்குவார் அரகராகோஷமிட்டு

76. இந்தப்படியான அற்புதங்கள் - அன்று
இருந்தது கதிர்காம யாத்திரையில்
வந்தவர் முருகன் என்று பக்தர் - அன்று
வாயாரக்கூறி மகிழ்ந்திடுவார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

மெட்டு: வேறு

அந்தக்கால யாத்திரையை அடியேன்நான் கேட்டறிந்தேன்
கந்தவேளைக் கண்டதாக வேல்முருகா - அவர்கள்
கருணையோடு பார்த்ததையும் சொன்னார்கள்

சிந்தனையை ஒன்றாக்கி சிவன்மகனை நெஞ்சில்வைத்து
முந்தைவினை தீருமென்று வேல்முருகா - வனத்தில்
முத்திபெற நடந்தார்கள் வேல்முருகா

சின்னவரோ பெரியவரோ பெயரைச் சொல்லி அழைக்கமாட்டார்
சின்னச்சாமி பெரியசாமி வேல்முருகா - என்று
சிறப்பாக அழைத்திடுவார் வேல்முருகா

அப்பாசாமி அம்மாசாமி அடியவரும் சொந்தச்சாமி
எப்போதும் தாமழைப்பார் வேல்முருகா - அவர்கள்
ஏற்றத்தாழ்வு பார்க்கமாட்டார் வேல்முருகா

குற்றம்குறை செய்யமாட்டார் குறும்பாகப் பேசமாட்டார்
மற்றவரை வையமாட்டார் வேல்முருகா - அவர்கள்
மனமெல்லாம் உன்நினைவே வேல்முருகா

பற்றெல்லாம் ஒன்றாக்கி பரம்பொருளே உனைக்காண
சுற்றம்சுகம் விட்டு வாறார் வேல்முருகா - உன்தன்
திருவடியே சரணமென்று வேல்முருகா

காவியுடைதானணிந்து கழுத்தில் ருத்ரராக்கமிட்டு
சாமியென்ற பெயரோடு வேல்முருகா - அவர்கள்
சற்றும் மனம் தளராமல் வேல்முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலைப்பெட்டி சாமான் வைத்து ஒய்யாரக் காவிகட்டி
தலையில்வைத்து தான்சுமந்து வேல்முருகா - காட்டில்
தனிவழியே நடந்துவாறார் வேல்முருகா

பற்றுவிட்டு பாசம்விட்டு பலநினைவு தானும்விட்டு
உற்றாரும் உறவும் விட்டு வேல்முருகா - நீயே
உற்றதுணையென்று வாறார் வேல்முருகா

நாடங்குடுகு சுரைக்குடுகு நல்லதண்ணீர் மௌ்ளுதற்கு
வாடநாற்றம் தள்ளுதற்கு வேல்முருகா - கையில்
வலுமிக்கக் கேத்தல் பேணி வேல்முருகா

உடுப்புக்கழுவ சோப்புயில்லை உச்சிவாரச் சீப்புயில்லை
அடுப்புக்கரி பல்துலக்க வேல்முருகா - அவர்க்கு
அழகுபார்க்க ஆசையில்லை வேல்முருகா

மனதையெல்லாம் ஒன்றாக்கி மற்றநினைவு இல்லையென்று
உனதடியே தஞ்சமென்று வேல்முருகா - அவர்கள்
உரைப்பாரே உன் நாமம் வேல்முருகா

கன்னியரோ காளையரோ கைக்குழந்தைக் காரர்களோ
அன்னியரோ யாத்திரையாய் வேல்முருகா - அப்போ
ஆரும்வரமாட்டார்கள் வேல்முருகா

அம்மையப்பன் தனையனுப்ப அன்றுபெற்ற மக்களெல்லாம்
இம்மைதனில் இனிக்காணோம் வேல்முருகா - இவர்கள்
இறையடியே தஞ்சமென்று வேல்முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தபாத யாத்திரையில் மீண்டும் வரமாட்டாரென்று
திடமான உறுதிகொண்டு வேல்முருகா - உன்தன்
திருவடியை நம்பிடுவார் வேல்முருகா

சொத்துசுகம் சொந்தபந்தம் சொகுசான வாழ்வு எல்லாம்
அத்தனையும் விட்டுவிட்டு வேல்முருகா - உன்தன்
அருட்பாதம் தேடிவாறார் வேல்முருகா

கதிர்காம யாத்திரைக்கு கால்நடையாய்ச் செல்வோரை
அதிகதுக்கம் தன்னோடு வேல்முருகா - மக்கள்
அன்றனுப்பி வைத்தார்கள் வேல்முருகா

திரும்பிவந்தால் நாம் மகிழ்வோம் திரும்பாவிட்டால் நாமழுவோம்
அரும்பிடுமாம் எண்ணமெலாம் வேல்முருகா - அன்று
ஆறுமுகன் துணைகொண்டு வேல்முருகா

வனத்தினிலே நடக்கையிலே வருகுதுகாண் மயக்கமென்று
மனமுவந்து சாய்ந்துவிட்டால் வேல்முருகா - அப்போ
வந்திடுமாம் அமரபதம் வேல்முருகா

அமரபதம் அடைத்துவிட்டால் அவருடலை காட்டினிலே
சமர்த்தாக விறகடுக்கி வேல்முருகா - அங்கே
தகனக்கிரிகை செய்திடுவார் வேல்முருகா

யாத்திரையைமுடித்துவிட்டு காத்திரமாய் வீடு வந்தால்
காத்திருப்போர் அப்போது வேல்முருகா - சேர்ந்து
கதறிக் கதறி அழுவார்கள் வேல்முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துவந்த தவப்பயனால் சேருமிடம் சேர்ந்துவிட்டார்
உய்யவழி கிடைத்ததென்று வேல்முருகா - மற்ற
உறவு எல்லாம் பிராத்திப்பார் வேல்முருகா

இப்படியாய் அந்தநாளில் இருந்தென்று முன்னோர்கள்
தப்பாமல் சொன்னதெல்லாம் வேல்முருகா - மற்றோர்
தலைசாய்த்துக் கேட்டிருப்பார் வேல்முருகா

இன்னுமொன்று இருக்கிறது அதனையும் நான் சொல்லவேணும்
அன்று யாத்திரை சென்றுவந்தால் வேல்முருகா - அவர்கள்
அயவர்க்குக் கொடுக்கும் பொருள் வேல்முருகா

தேன்தினைமா தன்னோடு தேங்காயும் நெய்யும் சேர்த்து
நன்றாகக் காயவைத்து வேல்முருகா - அதனை
நல்லபடி முடிச்சுக்கட்டி வேல்முருகா

திருநீறு சந்தணமும் திருப்தியாக வாங்கி வந்து
பெருமையுடன் கொடுப்பார்கள் வேல்முருகா - இதுதான்
பெரிய பிரசாதமென்று வேல்முருகா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு: வேறு
இந்தக்கால யாத்திரை

கதிர்காமம் கால்நடையாய் வேல்முருகா
கட்டாயம் போகவேண்டும் வேல்முருகா
அதிகளவு சிலவு வரும் வேல்முருகா
அதற்கெல்லாம் கலங்கமாட்டேன் வேல்முருகா

குடும்பத்தோடு வருவதற்கு வேல்முருகா
கூடுதலாய்ப் பணம்தேவை வேல்முருகா
அடுத்த வீட்டுக் காரியிடம் வேல்முருகா
அடகு வைத்துப் பணம்வாங்கி வேல்முருகா

உடுப்பெல்லாம் புதிதுவாங்கி வேல்முருகா
ஊறுகாயும் உணவுப்பண்டம் வேல்முருகா
அடுப்புக்கூட கம்பியொட்டி வேல்முருகா
அத்தனையும் மூட்டைகட்டி வேல்முருகா

தலைமேலும் தோள்மேலும் வேல்முருகா
தளர்ந்தாலும் உடல்வலிமை வேல்முருகா
மலைபோலப் பாரமையா வேல்முருகா
மனதுகூட வலிக்குதையா வேல்முருகா

இன்னும்சிலர் யாத்திரையை வேல்முருகா
இனிதாகக் கூறுகின்றேன் வேல்முருகா
நன்றாகச் சென்றுவர வேல்முருகா
நாடி உன்தன் பதிதேடி வேல்முருகா

உல்லாசப் பயணம்போல வேல்முருகா
ஊருலகம் பார்க்கவென்று வேல்முருகா
நல்லபடி கலகலப்பாய் வேல்முருகா
நாடிவாறார் கிலுகிலுப்பாய் வேல்முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்துக்கோர் கிறீம்வகையும் வேல்முருகா
நினைத்தபடி சோப்பும் வாங்கி வேல்முருகா
வாரிக்கூந்தல் முடிப்பதற்கு வேல்முருகா
வாங்கிவாறார் கண்ணாடிசீப்பு வேல்முருகா

அத்தர் செண்டு வாசனையும் வேல்முருகா
அழகூட்டும் டைவகையும் வேல்முருகா
எத்தனையோ வலிமருந்தும் வேல்முருகா
எடுத்துக்கொண்டு யாத்திரையாய் வேல்முருகா

பத்துநாள் பயணமென்று வேல்முருகா
பத்துயோடி உடுப்பெடுத்து வேல்முருகா
நித்தமொரு உடுப்புமாற்றி வேல்முருகா
நினைத்தபடி நடந்துவாறார் வேல்முருகா

காற்று ஊதும் தலையணையும் வேல்முருகா
கைக்குழந்தைக் கோர்கொட்டில் வேல்முருகா
ஆற்றலுடன் படுத்துறங்க வேல்முருகா
அழகான மெத்தையுடன் வேல்முருகா

கூதல் குழிர் தாக்காமல் வேல்முருகா
குசியான போர்வையோடு வேல்முருகா
பாதத்திலே பாதரட்சை வேல்முருகா
பார்ப்பதற்கு மிகஎடுப்பாய் வேல்முருகா

உல்லாசப் பயணம்போல வேல்முருகா
உன்பதியைத் தேடிவாறார் வேல்முருகா
எல்லாமுன் அருளென்று வேல்முருகா
எல்லோர்க்கும் கருணைகாட்டு வேல்முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வில்லுப்பாட்டு

தன்தனத்தோம் என்று சொல்லிலே
வில்லினில் பாட வில்லினில் பாட
வந்தருள்செய் கணபதியே
வந்தருள்செய் கணபதியே
கந்தனுக்கு மூத்தவனே - எங்கள்
கற்பகமே வாருமையா

பேரன்புமிக்க பக்தகோடிகளே! கந்தப்பெருமான் நமது சொந்தப் பெருமான் எனநினைத்து அவர் கருணை பெற வேண்டுமென்று, இந்தக் காட்டுவழிப் பாதையிலே, கால்கடுக்கக், கைகடுக்க, உடல்வலிக்க, உள்ளத்தை தூய்மைப்படுத்தி எல்லோரும் உறவு என்று வந்திருக்கின்ற பக்தகோடிகளே! உங்கள் அனைவருக்கும் எங்களது அன்பு வணக்கம்,

நாங்களின்று பாதயாத்திரை பற்றி பத்துப் பதினைந்து வரி வில்லிசையில் பாடப்போகின்றோம்.

சிந்தனையில் அமர்ந்து சீரோடு சிறப்பு நல்கும்
கந்தனின் திருப்பாதம் நாம் பணிவோம் - அவன்
கருணை மழையினிலே நாம் நனைவோம்

கேள்வி: என்னையா! இந்த நடுக்காட்டில் மழைபெய்தால் இந்தப் பக்தர்கள் எல்லாம் என்னையா செய்கிறது.

! அந்த மழை இல்லையப்பா! இது கந்தப்பெருமானின் கருணை மழை.

? அப்படியானல் அந்தக்கருணை எல்லோருக்கும் கிடைக்குமா?

! ஆமாம்! அவரவர் மனம் போலக் கிடைக்கும்.

? அது எப்படியென்று சொல்ல வேண்டுமையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு: (உலகம் சமநிலை பெறவேண்டும்)
கடமைக்கு யாத்திரை நாம் போவோம்
கடும்நடை நாமும் நடந்திடுவோம்
கதிர்காமப்பதி சேர்ந்திடுவோம்
கடமையை அன்றே நாம் முடிப்போம்
திடமுடன் மறுநாள் வஸ்சேறி
திரும்புவோம் சொந்த ஊர்தனக்கு

! சரிதானையா! அப்படியும் யாத்திரை போகிறார்கள்தான்.
இன்னுமொரு சிலர் இருக்கிறார்கள் சாமி அவர்கள்
இருதோணியில் கால் வைத்தவர்கள் போல

? அவர்கள் எப்படிச்சாமி

பாட்டு : கோழியும் குஞ்சியும் கூட்டினிலே
குறுணி போடவும் ஆளும் இல்லை
தாழி உடைந்த மத்தாகப்பயிர்
தலை விரி கோலம் கொண்டிருக்கும்
எட்டுப்பத்து நாள் தங்கிவிட்டால் ஐயோ
எனது வயல் வெளி அழிந்துபோகும்
வட்டையில் அறக்கொட்டி வந்திருக்காம் நான்
வாங்கிய எண்ணையும் அடிக்கவில்லை

! சரிதான் சாமி! காட்டிலே யாத்திரை போவார்கள் வீட்டில்
தான் நினைவெல்லாம் இருக்கும்.

! இன்னும் ஏதாவது இருந்தால் சொல்லுங்க சாமி

(காவடி மெட்டு) பக்கத்து வீட்டில் நடப்பதெல்லாம் - வேல்முருகா
பார்த்து மனதில் பதிந்து கொண்டு
அக்கா மச்சாள் உறவென்று - வேல்முருகா
அன்பான யாத்திரையில் வேல்முருகா

ஆக்கி அவித்து உண்டுவிட்டு - வேல்முருகா
அமர்ந்திருக்கும் வேளையிலே
வாக்கினாலே உரைப்பார்கள் - வேல்முருகா
நீயும், வடிவாகக் கேட்டிருப்பாய் வேல்முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

? அப்படி என்னத்தச்சாமி அள்ளிக்கொட்டப் போறாங்க அதக்கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல வேண்டும் சாமி!

! ஐயோ! சாமி அப்பம் என்றால் உங்களுக்கு புட்டுக்காட்ட வேணும்போல

? உங்களுக்கு மட்டும் விளங்கினால் போதுமா எங்களுக்கும் விளங்கத்தானே வேணும் சாமி.

! ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று சொல்வார்கள். ஆனால், இவர்களோ ஒவ்வொரு சோறாக நசித்துப் பார்ப்பதுபோல, அந்தக் கற்பனைக்கு, கண் வைத்து, மூக்கு வைத்து, காது வைத்து, வாய் வைத்து, பல்லு வைத்து, நாக்கு வைத்து, ஐயோ முருகா! இதுக்குமேல நான் சொல்ல மாட்டேன் சாமி

? சாமி? நீங்க சொல்லாவிட்டால் நாங்க வேறு யார்கிட்டக் கேட்கிறது சாமி

நான் சொல்ல மாட்டன் அவையெல்லாம்
நான் சொல்லமாட்டன்
காட்டுவழிப் பாதையில்தான் காதல்செய்ய
உகந்ததென்று
கண்ணால பேசுவதை நான் சொல்லமாட்டன்
அதையெல்லாம் நான் சொல்லமாட்டன் - (நான்)
குடும்பம் என்றால் வீட்டினிலே குதுகலமாய்
வாழ்வதைப்போல்
காட்டினிலே வாழ்வதனை நான் சொல்லமாட்டன் - சாமி,
நான் சொல்ல மாட்டன், கதிர்காமம் போவதற்கு பட்ட கடன் ஐம்பதென்று - பழைய கடன் கொடுத்ததையும் நான் சொல்லமாட்டன் சாமி, நான் சொல்லமாட்டன், டேக் கிறீமும் நைற் கிறீமும் நேர்த்தியாக வாங்கிவந்து, பார்த்துப் பார்த்து போட்டதெல்லாம் நான் சொல்ல மாட்டன் சாமி, நான் சொல்லமாட்டன், கமகமன்னு மணப்பதற்கு கனத்த காசி கொடுத்த செண்டு, காட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணம் வீசுவதை நான் சொல்லமாட்டன், சாமி, நான் சொல்லமாட்டன், சோப்பு, சீப்பு, கண்ணாடி, சொகுசாக வாங்கிவந்து, பார்த்துப் பார்த்துப் போடுவதை நான் சொல்லமாட்டன், சாமி நான் சொல்லமாட்டன், நகம் உதடு கண் என்று நல்ல கலர் அடிப்பதையும் நான் சொல்லமாட்டன், சாமி, நான் சொல்லமாட்டன், கண்ணிரண்டு முகம்பார்க்க கருத்து அலை மோதும் போது கற்பனையில் வருவதெல்லாம் நான் சொல்ல மாட்டன், சாமி, நான் சொல்லமாட்டன்.

! இப்படியாக! புனித யாத்திரையில் நடக்கின்ற புதிய புதிய நிகழ்வுகளில், பாதியைத்தான், நான் உங்களுக்கு எடுத்துச் சொன்னேன்.

? அப்படியானால், உண்மையான பக்தியோடு யார் சாமி யாத்திரை செய்கிறார்கள்?

! உண்மையான பக்தியோடு, அந்த, உமை மகனின் அருளைப்பெற வேண்டுமென்று வீட்டிலே இருந்து புறப்பட்டு வந்து காட்டிலே நடக்கும்போது, எப்படியோ, வீட்டு நினைவு வந்து விடும்.

? எப்படிச்சாமி, வீட்டு நினைவு வரும்.

(காவடி மெட்டு)

வயது வந்த பிள்ளைகளை வீட்டினிலே விட்டுவிட்டு
பயமின்றி நாங்கள் வந்தோம் வேல்முருகா
இப்போ, பயந்து பயந்து சாகுகின்றோம், வேல்முருகா
கள்ளன் காவாலியென்று களிசரைகள் மலிந்தகாலம்
உள்ளமெல்லாம் உதறுதையா வேல்முருகா
எமக்கு, உற்றதுணை நீதானே வேல்முருகா

! என்று, தங்கள் மனதிலே தானாக அந்த நினைவு வந்து விடும். இவை மட்டுமா? இதைப்போல, ஆயிரம் ஆயிரம் நினைவுகள் அடிமனதில் இருந்து தோற்றிக் கொண்டே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

? அப்படியானால், சாமி அந்த நினைவுகள் இல்லாமல் யார் சாமி வருகிறார்கள்

வருவார்கள், அவர்கள்....................................

(மெட்டு உள்ளம் உருகுதையா)

உள்ளம் குளிர வேண்டும் - முருகா நீ
உள்ளத்தில் அமரவேண்டும்
முள்ளின்மேல் படுத்தாலும் - மனதில்
முற்றும் நீ நிறைய வேண்டும் (முருகா)

என்னதான் சொந்தபந்தம் - முருகா
எனக்கென்று எதுவுமில்லை
உன்னருள் கிடைத்துவிட்டால் - முருகா
உள்ளம் குளிருமையா (முருகா)

வனத்தில் நடந்துவிட்டு - மீண்டும்
வந்து நாம் சேர்வோமென்று
மனதிலும் நினைக்கவில்லை - உன்தன்
மலர்ப்பதம் தாருமையா - (முருகா)

காட்டிலே நான் மடிந்து - முருகா
கட்டையை விட்டாலும்
காட்டிலே அழிய வேண்டும் உன்தன்
கருணையே கிடைக்க வேண்டும் - (முருகா)

! என்ற, ஒரே பிடிவாதத்தோடு, ஒரே எண்ணத்தோடு ஒரு சிலர்தான் வருவார்கள், அவர்களுக்கு அந்தக் கலியுகவரதன் காட்சியும் கொடுப்பான், கருணையும் கொடுப்பான் என்று கூறி

விருப்பமுடன் அமர்ந்திருந்து
வில்லுப்பாட்டு கேட்டிருந்து
ரசித்தவங்க எல்லோருக்கும் வணக்கம்
கந்தன் கருணை பெற்ற எல்லோருக்கும் வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கதாப்பிரசங்கம்

கேட்டதை எமக்கருளும்
கிருபை நிறைந்தவராம்
காட்டானை முகம் கொண்ட கணபதியே - உன்மேல்
காதல் கொண்டேனே குணபதியே
(கைத்தல நிறைகனி)................................

கந்தனின் அடியவர் சிந்தையில் உறைபவர்
காட்டுவழிதனில் கால்நடையாய்
வந்திடும் அடியவர் துயர்தனைத் தீர்த்திடும்
வரம்தரும் கந்தனின் அடிபேணி

வேலுடன் மயில்தனை வைத்திடும் முருகனை
வேண்டியே யாத்திரை செய்வோமே
காலுடன் கைவலி போக்கியே வைத்திடும்
கந்தனை என்றுமே மறவாதே

வள்ளிதெய்வானையின் மனம் மகிழ் சீலனாம்
வரம்தரும் கந்தப் பெருமானே
அள்ளியே வரம்தரும் ஆறுமுகனேயுன்
அருட்பாதம் என்றுமே நாம் பணிவோம் என்று கூறி

நமது புனித யாத்திரையின் பெருமைதனை அடியவர் அனைவருடனும் பகர்ந்து கொள்ள சற்று திருவருள் கிடைத்திருக்கிறது.

கந்தப்பெருமானின் சொந்த அடியார்களே! இது எனக்குமட்டும் கிடைக்கவில்லை, உங்களுக்கும் கூடத்தான். சுத்தமாக இருந்தால் தான் சுகம் கிடைக்குமென்று சொல்வார்கள். நாம் ஒரு நாளைக்கு மூன்று தடவை குளித்து, நான்கு தடவை உடை மாற்றினால் அது சுத்தமாகாது. வீடு வெளியிலே சுத்தமாக இருக்கலாம். ஆனால் அது, உள்ளே சுத்தமாக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபோல நமது உடம்பிலே அழுக்கு இருக்கலாம் உடையிலே அழுக்கு இருக்கலாம் ஆனால் மனதிலே இருக்கக் கூடாது. அதில் அழுக்கு இருந்தால் துருப்பிடித்த இரும்புபோல் ஆகிவிடும்.

இதயம்தான் எனக்குப் பிடித்த இன்பம்
அதை, இஸ்டப்படி ஓடவிட்டால் வந்திடுமே
துன்பம், இதயம்தான் எனக்குப் பிடித்த இன்பம்

நமக்கு இன்பத்தையும் துன்பத்தையும் கொடுப்பது நமது இதயம் தான். அதுதான் மனம், இந்த மனதால் நாம் ஒவ்வொருவரும் நினைக்கும் நினைவுகள் தான் நமது வாழ்வுக்கு வளம் கொடுப்பது. கெட்ட சிந்தனை இருந்தால் கெட்டே போவோம், நல்ல சிந்தனையை நினைத்துக் கொண்டிருந்தால் நன்றாகவே வாழ்வோம்! அதுக்கு ..................................

நல்லமனது நமக்கு வேண்டும் சாமிமாரே
நாழும் பொழுதும் நமது வாழ்வில்
நல்லபடி நாம் உயர்வதற்கு
நல்லமனது நமக்கு வேண்டும் சாமிமாரே

இதுநான் சொல்லவில்லை, அந்தக் கந்தப்பெருமான் சொல்கின்றார். எவ்வளவோ கொடிய மிருகங்கள் வாழும், இந்த அரிய வனாந்தரத்தில் எந்த ஒரு வில்லங்கமும் இல்லாமல் நாம் யாத்திரை செல்கின்றோம் என்றால், இது, யாருடைய அருள் அந்தக் கந்தப் பெருமானுடைய திருவருள், அப்படிப்பட்ட எம்பெருமானுடைய திருநாமத்தை நாம் மறக்கலாமா? இந்த மானிடப்பிறவி எடுத்த நாம். ஒரு நாளைக்கு இரண்டு லெட்சத்து அறுபத்தாறாயிரத்து அறுநூற்றி தொண்ணூற்றி ஒன்பது முறை மூச்சு விடுகின்றோம் என்று சொல்வார்கள், அதில் பாதிமுறையாவது விடும் மூச்சில் எம்பெருமானது சிந்தனை வரக்கூடாதா?

வரும், வரவேண்டும் என்பதற்காகத்தான் நாம் யாத்திரை செய்கின்றோம். இந்த யாத்திரையில் வந்து விட்டால், நாம் நித்திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் போதும் வரும். நினைவு வரும்போதெல்லாம் வரும், வந்துவிட்டால்,

பக்திவளருதையா - முருகா
பாதம் பணிகையிலே
முக்தி கிடைக்குமென்று - முருகா
முழு மணம் மகிழுதையா

கோதை இருபுறமும் - வைத்த
குமரா உனை மறவேன்
பாதை வழிதொலைய - முருகா
பக்கம் நீ வாருமையா

அதிசிவன் மகனே - எங்கள்
அழகு வடிவேலா
ஓதினேன் உன்நாமம் - முருகா
உள்ளம் இனிக்குதையா

என்று உள்ளம் இனிக்க இனிக்க அந்த முருக நாமத்தை நாம் ஓதிக்கொண்டு சென்றால், வந்தவினையும் வருகின்ற வல்வினையும் - அந்தக் கந்தப்பெருமான் விலக்கி வைப்பார். அப்படி அவருடைய திருநாமத்தை ஓயாமல் ஓதிக்கொண்டிருந்த ஒரு அம்மையாரின் கதையைச் சொல்கின்றேன்.

ஒரு ஊரிலே ஒரு அம்மையார் இருந்தார். அவர் ஓயாமல் வேலா, வேலா, என்று அந்த வேற்படைப் பெருமானை, எப்போதும் உரத்த குரலில் அழைப்பார். அவரது பக்கத்து வீட்டிலே வேலன் என்னும் நாமத்தோடு ஒருவன் வாழ்ந்து வந்தான். இந்த அம்மையார் அதிகாலை வேளையிலே வேலா, வேலா என்று அழைக்கும் போதெல்லாம் அவன் நினைத்துக் கொள்வான் தன்னைத் தான் அழைக்கின்றாள் என்று இவனும்போய் அவளது வாசலிலே நின்று விட்டு திரும்பி விடுவானாம். இப்படி நடப்பதை பக்கத்து வீட்டுக்காரன் பார்த்துவிட்டு, ஒருநாள் அவளது கணவரிடம் சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையாரின் கணவனோ அதிகாலையில் எழுந்து தன் கடமைகளை முடித்துவிட்டு தன் தொழிலுக்குச் சென்று விடுவான். ஒருநாள் இதைப் பார்க்கத்தான் வேண்டுமென்று, போனவன் திரும்பி வந்தான் உண்மைதான். வாசலிலே பக்கத்து வீட்டுக்காரன் நிற்கின்றான். அம்மையாரோ சாமி அறையிலே பூசை செய்து கொண்டிருக்கிறார். ஆனால், சந்தேகக்கோடு சந்தோஷக்கோடு என்று சொல்வார்களே அதேபோல் சந்தேகம் வந்துவிட்டது. உடனே கத்தியை எடுத்துக் கொண்டுபோய் சுவாமி அறையிலே இருந்த மனைவியின் கைகளை வெட்டிவிட்டான். இவன் அம்மையாரின் கரம்களை வெட்டியதும் அவனுக்கு கண்பார்வை போய்விட்டது. உடனே அம்மையார் வேற்படைப் பெருமானை வேண்டி முருகா எனது கை இரண்டும் போனாலும் பறவாயில்லை எனது கணவனின் கண்பார்வை கிடைக்க வேண்டுமென்று, அழுதுதொழுது வணங்கி நின்றார் அம்மையார். உடனே கந்தப் பெருமான் அருளால் அவனது கண்ணிரண்டும் கிடைத்தது. அம்மையாரின் கரம்களும் கிடைத்தது.

இதுபோல, யார் யார் எது எது வேண்டி அழுது, தொழுது கேட்கின்றார்களோ அவர்களையெல்லாம் அந்த ஆறுமுகப் பெருமான் கைவிடமாட்டார்.

சிந்தையில் நிறைந்திடும் கந்தனின் நாமத்தை சிறிதும் மறவாதே
வந்திடும் பேரருள் தந்திடும் திருவருள்
வாழ்வு வளம் பெருக - நம்ம வாழ்வு
வளம் பெருக...............................

என்று கூறி அனைவரிடமும் இருந்து விடைபெறுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## வழிநடைப்பத்து

அப்பனே வேல்முருகா ஐயா உன்தன்
அருட்பாதம் எப்போதும் நான் பணிந்து
தப்பாமல் கதிர்காமம் கந்தன் மீது
காதலுடன் கால் நடைக் கவிகள் பாட
எப்போதும் என்னாவில் வந்தமர்ந்து
எப்பிழையும் வாராமல் காப்பாயென்று
இப்போதே கவிபாட முனைகின்றேனே
எழில் முருகா வரமருள வருகுவாயே

ஆணவத்தால் அறிவிழந்து எத்தனையோ
அனியாயம் செய்துநான் உழன்றுநொந்து
கானகத்தே கால்நடையாய் வாறேன் சுவாமி
கருணையுடன் என்வினையைத் தீர்ப்பாயென்று
வானவர்க்கு விடுதலையாய் வந்துதித்த
வடிவேலா மகிழ்வோடு கருணைகொண்டு
கானக்குற வள்ளிக்கு உகந்ததேவே
கதிர்காமா வரமருள வருகுவாயே

இன்றல்ல நாளையென்று இதுவரைக்கும்
இருந்தேனே கல்லாக மனதை வைத்து
மண்மறையும் முன்னேனும் உனைத்துதித்தால்
மனமகிழ்ந்து நற்பேறு தருவாயென்று
கண்மூடா மயில்மீது அமர்ந்திருக்கும்
கதிர்காமா உன்பதிக்குக் கால்நடையாய்
எண்ணிலாப் பக்தருடன் வருகின்றேனே
எழில்முருகா வரமருள வருகுவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈனமற்ற இதயத்துள் இருந்தமாயை
இதுவரைக்கும் உனைநினைக்கக் கூடாதென்று
ஏனோதான் எண்ணம்போல் ஆட்டிவைத்து
என்னிலையைக் கதிகலங்கச் செய்திட்டாலும்
மானீன்ற பூங்கொடியாள் வள்ளி பாகா
மதிகெடுமுன் கால்நடையாய் நடக்கும்போது
கானகத்தே என் ஆவி பிரிந்திட்டாலும்
கதிர்காமா வரமருள வருவாயே

உள்ளத்தில் எள்ளளவும் இரக்கமின்றி
உனையென்றும் நினையாமல் இதுவரைக்கும்
பள்ளத்தைத் தேடும் நீர் பாய்ந்தாப்போல
பாவி நான் மனம்போல வாழ்ந்து விட்டு
தெள்ளமுதே திருமுருகா உன்பதியைத்
தேடிநான் கால்நடையாய் நடந்துவாறேன்
எள்ளளவு என்மீது கருணைகாட்டி
எழில் முருகா வரமருள வருகுவாயே

ஊனக்கண் கொண்டு நான் உற்றுப்பார்த்தேன்
உன்னுருவம் கல்லாக இருக்குதையா
ஏனென்ற கேள்விக்கு இடமேயில்லை
இக்கலியில் அப்படித்தான் நீயிருப்பாய்
தேன்போன்ற திருநாமம் மறந்து நானும்
தெருவெல்லாம் வீணாகச் சுற்றி விட்டு
கானகத்தே கால்நடையாய் நடந்துவாறேன்
கதிர்காமா வரமருள வருகுவாயே

என்னுள்ளம் என்னென்ன நினைக்குதென்று
என்குருவே உந்தனுக்குத் தெரியும்தானே
உன்நினைவை மறந்துநான் உறவு என்று
உணராமல் எத்தனையோ கற்பனையில்
தன்னாலே சிறகடித்துப் பறக்கும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைக்கனத்தோ டிதுவரைக்கும் வாழ்ந்து விட்டு
பொன்னான உன்பதியைத் தேடிவாறேன்
புண்ணியனே வரமருள வருகுவாயே

ஏசுவார் பேசுவார் என்னைப் பார்த்து
ஏழனமாய்ச் சிரிப்பார்கள் புறமும் காட்டி
வீசுவார் கல்லுபோல் எல்லாம் ஏந்தி
வீணான வார்த்தைகளால் என்னைத் தூற்றி
பேசாமல் மௌனமாய் நான் இருந்துவிட்டு
பெருமானே உன்பதியைத் தேடிவாறேன்
மாசுபடா வேல்கையில் வைத்திருக்கும்
மால்மருகா வரமருள வருகுவாயே

ஐந்துகரம் கொண்டவனின் அருமைத்தம்பி
அடியார்கள் குறைதீர்க்கும் ஆசைத்தம்பி
வந்தவினை தீர்த்தருளும் வடிவுத்தம்பி
வருகின்ற வல்வினையை மாற்றும்தம்பி
எந்தவினை வந்தாலும் விலக்கும் தம்பி
என்மீது கருணைகாட்டும் நல்ல தம்பி
அந்தரத்தில் மயில்மீது ஆடும் தம்பி
அருட்கடலே வரமருள வருகுவாயே

ஒருவருமே துணையெனக்கு இல்லையையா
ஓடிவிட்டார் பக்தரெல்லாம் எனக்கு முன்னே
இருள்வந்து மூடுதையா வேகமாக
இனியெனக்கு கண்ணிரண்டும் மங்கலையா
முருகையா வாருமையா கூட்டிச்செல்ல
முடியாமல் நானிப்போ தவிக்கும்போது
கருப்பொருளே கதிர்காமக் கந்தா என்மேல்
கருணையுடன் வரமருள வருகுவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதுகின்றார் பக்தரெல்லாம் உன்தன் நாமம்
ஓயாத செவிக்கினிமை கேட்கக் கேட்கக்
தீது ஒன்றும் நமக்கினி இல்லையென்று
திருப்தியுடன் வனம்தனிலே நடந்துவாறார்
ஏதுமொரு துயர் துன்பம் நேர்ந்திட்டாலும்
எழில் முருகா முன்னின்று காப்பாயென்று
சூதுசெய்த சூரனுடன் கிழித்ததேவே
சுந்தரனே வரமருள வருகுவாயே

ஔவைக்கு சுட்டபழம் அழித்த எங்கள்
அழகேசா அடியார்கள் வனத்திலிப்போ
எவ்வளவோ பெரும்பாரம் சுமந்துகொண்டு
எண்ணற்ற அடியவர்கள் நடந்துவாறோம்
திவ்வியனே எங்கள் மேல் கருணை கொண்டு
திருமுருகா உன்னருளைக் காட்டவேண்டும்
கௌரமாய்க் கதிர்காமப் பதியில் வாழும்
கதிர்வேலா வரமருள வருகுவாயே

அக்கால யாத்திரையில் அடியாரோடு
ஆறுமுகா அடியவராய் நீயும் சென்று
பக்கத்தில் நண்பர்போல் போயமர்ந்து
பலநலனும் விசாரித்து கூட்டிச் சென்றாய்
இக்கால யாத்திரையில் மனதுவைத்து
இயல்பாக உன்னருளைக் காட்ட வேண்டும்
திக்கெல்லாம் புகழ்பெற்று ஓங்கிநிற்கும்
திருமுகா வரமருள வருகுவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்கியோனின் இதர வெளியீடுகள் . . .

01. சேனைக்குடியிருப்பு முத்துமாரியம்மன் பெயரில் பொன்னூஞ்சல், வைரவர் அகவல்.
02. அம்மன் அருட்பாகங்கள், ஆதிசிவன் அருட் காவியம்.
03. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் பத்து, மயானபத்து.
04. சேனைக்குடியிருப்பு முத்துவிநாயகர் பெயரில் கண்கொடுத்த கற்பகப்பத்து, திருக்குமரன் வரமருள் பத்து.
05. ஆழிப்பேரலையின் அனர்த்தக் காவியம்.
06. கதிர்காமக் கந்தன் பெயரில் வழிநடைப்பத்து, வழிநடைக்கும்மி - 01.
07. கிட்டங்கிப்பிள்ளையார் பெயரில் பொன்னூஞ்சல்.
08. சேனைக்குடியிருப்பு முத்துமாரியம்மன் பெயரில் ஊர்வலக்கும்மி.
09. துறைநீலாவணை கண்ணகையம்மன் ஊர்வலக் கும்மி.
10. கதிர்காமக் கந்தன் பெயரில் வழிநடைப்பத்து, வழிநடைக்கும்மி - 02.
11. தசாவதாரம் கும்மிப் பாடல்கள்.
12. கண்ணப்பநாயனார் கும்மிப் பாடல்கள்.
13. காரைக்காலம்மையார் கும்மிப்பாடல்கள்.
14. சிந்தாயாத்திரைப் பிள்ளையார் வரலாற்றுப் பத்து சிர்பாதகுல வரலாற்றுக் கும்மி.
15. தசாவதாரப் பத்து, வேல்முருகன் காவடிப் பாடல்.
16. தாந்தாமலை முருகன் வழிநடைப்பத்து.
17. தாதன் வருகையும் தீப்பள்ளைய வரலாறும்.
18. திருமுருகன் திருவிளையாடல்.
19. ஸ்ரீ நாகதம்பிரான் காவியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதிர்காம பாதயாத்திரைப் பாமாலை

ஆக்கம்: கவிஞர் வைரமுத்து கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org